சொன்னார்-கடலிலே விளைகிற கனி என்று—அந்தக் கனியை வெளிநாட்டிற்கு அனுப்ப நமக்கு அதிகாரம் இருக்கிறதா? மிளகாய் நிறைய விளைகிறது, வெங்காயம் நிறைய விளைகிறது. மிளகாயும், வெங்காயமும் தேவைப்பட்டால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. மிகச் சாதாரண விஷயங்கள். ஆகவே, சின்ன விஷயங்களில்கூட, உரிமையற்ற நிலையில், இன்றைக்கு இந்திய நாட்டு அரசியல் சட்டம் நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் ரஷியா, அமெரிக்கா போன்ற நாடுகள் திட்டங்களை வகுத்திருக்கின்றன.......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u>—திரு. ராஜு, அடுத்த, தனிநபர் அலுவல் நாளன்று தொடர்ந்து பேசுவார்.

[பிற்பகல் 1.30]

<u>4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).</u>

<u>(இ) பேரவையின் அலுவல்.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவுகளின் படி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பேரவை நிகழ்ச்சிகளில் கீழ்க் கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-8-1980 (வெள்ளிக்கிழமை)

அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இனங்களுடன் கீழ்க்கண்ட சட்ட முன்வடிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.

(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1980).

(2) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய் தீர்வை தனித்தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1980)

பேரவைத் தலைவர்

2-8-1980 சனிக்கிழமை முதல் 4-8-1980 திங்கட்கிழமை முடிய	ஏற்கனவே அளிக்கப்பட்டபடி பேரவைக் கூட்டம் இல்லை.
5-8-1980 செவ்வாய்க்கிழமை 6-8-1980 புதன்கிழமை	ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இனங்களில் 1-8-80 எடுத்துக் கொள்ளப்படும் இரண்டு இனங்கள் தவிர மற்ற இனங்களும் மற்றும் இரண்டு அரசினர் சட்ட முன்வடிவுகளும் எடுத்துக் கொள்ளப்படும்.
7-8-1980 வியாழக்கிழமை 8-8-1980 வெள்ளிக்கிழமை	ஏற்கனவே அளிக்கப்பட்டபடி
9-8-1980 சனிக்கிழமை	பேரவைக் கூட்டம் இல்லை. காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவையில்— 1. தந்தை பெரியார் 2. டாக்டர் அம்பேத்கார் 3. திரு. காயிதே மில்லத் 4. திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருஉருவப் படங்கள் திறந்து வைக்கப்படும்.
10-8-1980 ஞாயிற்றுக் கிழமை	விடுமுறை
11-8-1980 திங்கட்கிழமை 12-8-1980 செவ்வாய்க்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டனவும் இனி அறிமுகம் செய்யப்பட இருப்பனவும் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (1-8-1980) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.